**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 34/2008 Date:15.07.2025**

**(P.W.2)- சதீஷ்**

**<u>2 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**1.** என்னுடைய முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள இரண்டு வழக்குகள் யாரால் தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்குதெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள விவரங்களை நான் சொல்லி தான் வழக்கறிஞர் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள வழக்கு எண் OS.No. 34/2008, OS.No.195/2010 பற்றிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

2.நான் இந்த வழக்கில் எதன் அடிப்படையில் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் நான் வாங்கிய சொத்து எனக்கு வேண்டும் என்பதால் சாட்சியமளிக்க வந்துள்ளேன். வழக்கு பட்டிகை சொத்தை பொறுத்து நான் தனியாக வேறு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கின் எண் மற்றும் பரிகாரம் பற்றிய விவரங்கள் என்ன என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சாட்சியமளிக்க வந்துள்ள வழக்கு எண் என்ன என்றால் தெரியாது. இந்த வழக்கில் நான் வாதியாக உள்ளேனா அல்லது பிரதிவாதியாக உள்ளேனா என்றால் வாதியாக உள்ளேன்.

3. இந்த வழக்கில் யார் மூலமாக நான் வழக்கை நடத்துகிறேன் என்றால் எனக்கு சொத்து கொடுத்த நபர் மூலமாக நடத்துகிறேன். யார் எனக்கு சொத்தை கொடுத்தார்கள் என்றால் எனது அப்பா கொடுத்தார். எனது அப்பாவின் பெயர் என்ன என்றால் முடியப்பன். அவர் இந்த வழக்கில் வாதியாக சேர்க்கப்பட்டுள்ளாரா என்றால் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் எத்தனையாவது வாதியாக சேர்க்கப்பட்டுள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய முதல் விசாரணையில் பத்தி 10 ல் 07.12.2011 தேதியில் இரண்டு வழக்குகளையும் சேர்த்து நடத்த உத்தரவு பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் , மேற்படி காலத்தில் நான் இந்த வழக்கில் வாதியாக இருந்தேனா என்றால் தெரியாது.

4. முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள மேற்படி விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் யார் சொல்லி எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

எனது வழக்கறிஞரால் எழுதப்பட்டது. வழக்கு விவரங்களை பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. என் முதல் விசாரணையில் பத்தி 3 ல் குறிப்பிட்டுள்ள காரணங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கின் முதல் வாதியான சுசீலா என்பவரை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

5. மேற்படி நபருக்கு பட்டிகை சொத்து எவ்வாறு கிடைத்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவருடைய கணவர் 1ம் வாதிக்கு உயில் மூலமாக பாத்தியப்படுத்தி கொடுத்ததாகும். 3ம் வாதியின் கணவரின் பெயர் என்ன என்றால் கிருஷ்ணன். மேற்படி உயில் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி உயில் பற்றி சுசீலாவிடம் விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. என்னுடைய வீட்டிற்கும் வழக்கு பட்டிகை சொத்து வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 1 கிலோ மீட்டர் இருக்கும்.

**6.** என்னுடைய வீடும் வழக்கு பட்டிகை வீடும் கிராம புறத்தை சேர்ந்தது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தை பொறுத்து வழக்கு நிலுவையில் இருப்பதை பொறுத்து சுசீலா என்னிடம் தெரிவித்துள்ளாரா என்றால் இல்லை. நான் எவ்வளவு நாட்களாக வெளிநாட்டில் வேலை செய்து வருகிறேன் என்றால் சுமார் 18 வருடங்களாக, ஓமன் நாட்டில் வேலை செய்து வருகிறேன் . நான் மேலே குறிப்பிட்ட கிருஷ்ணன் என்பவரும் அவருடைய சகோதரர்களும் ஓமன் நாட்டில் வேலை செய்கிறார்கள் என்றால் அது பற்றி தெரியாது.

**7.** மேற்படி கிருஷ்ணனின் முழுப்பெயர் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கிருஷ்ணனின் முழுப்பெயர் Sreekrishnan என்றால் பழக்கத்தில் கிருஷ்ணன் என்று கூப்பிடுவார்கள், எனவே அவ்வாறு தான் தெரியும். மேற்படி கிருஷ்ணனுக்கும் , சுசீலாவிற்கும் என்ன உறவு என்றால் கணவன் மனைவி ஆவர். மேற்படி கிருஷ்ணன் என்பவர் தீருமணத்திற்கு முன்பு வெளிநாட்டில் இருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் எனது முதல் விசாரணையில் சுசீலாவிடம் கேட்டறிந்ததாக குறிப்பிட்டுள்ள சங்கதிகள் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் என் அக்காவின் கணவர் மூலம் தெரியும்.

**8**. மேற்படி சங்கதியையும் எனது அக்காவின் கணவர் பெயரையும் எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. இந்த வழக்கு குறித்து எனக்கு எவ்வாறு தெரிய வந்தது என்றால் 9ம் பிரதிவாதியான லட்சுமி என் மீது காவல்நிலையத்தில் வழக்கு பட்டிகை சொத்து சம்பந்தமாக எழுந்த பிரச்சனையில் புகார்

கொடுத்திருந்தார், அப்போது தெரிய வந்தது. மேற்படி புகார் கொடுக்கப்பட்ட சமயத்தில் நான் வெளிநாட்டில் இருந்தேன் என்றால் சரிதான். மேற்படி புகார் யார் மீது கொடுக்கப்பட்டது என்றாலும் மேற்படி விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றாலும் என் அப்பா மீது புகார் கொடுக்கப்பட்டது .

**9.** எனது அப்பா மூலம் மேற்படி விவரம் எனக்கு தெரியும். எனது அப்பா எப்போது வழக்கு பட்டிகை சொத்தை கிரயம் பெற்றார் என்றால் 25.10.2010 அன்று கிரயம் பெற்றார். மேற்படி கிரய ஆவணத்தின் அசல் ஆவணம் எங்குள்ளது என்றால் எனது வழக்கறிஞர் அலுவலகத்தில் உள்ளது. எனது தகப்பனார் எனக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசல் எங்குள்ளது என்றால் வீட்டில் உள்ளது. சுசீலாவின் கணவர் கிருஷ்ணனுக்கு வழக்கு பட்டிகை சொத்தை பொறுத்து கிருஷ்ணன் பெயரில் உள்ள மூல ஆவணம் யாரிடம் உள்ளது என்றால் எனது அப்பாவிடம் உள்ளது.

**10.** மேற்படி மூல ஆவணம் என் அப்பாவிடமில்லையென்றாலும் பிரதிவாதியிடம் உள்ளது என்றாலும் அதை பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வாசாஆ. 1 ஆவணத்தில் Sreekrishnan என்பவருக்கு 1412/2006 ஆவணம் மூலம் வழக்கு பட்டிகை சொத்து பாத்தியப்பட்டது என்றும் அந்த ஆவணத்தின் அடிப்படையில் மேற்படி கிருஷ்ணன் சுசீலாவிற்கு பின் தொடர்ச்சி அவகாசப்படி பாத்தியப்பட்டு எனது தகப்பனாருக்கு பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் ( சாட்சி ஆவணத்தை படித்து பார்த்து பதிலளித்தார் ) .

**11.** வாசாஆ. 1 ஆவணத்தில் நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளவாறு சுசீலாவிற்கு உயில் மூலம் பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லையென்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையிலும் எனது வழக்குரையிலும் சுசீலாவிற்கு உயில் மூலம் வழக்கு பட்டிகை சொத்து பாத்தியப்பட்டது என்று பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் குறிப்பிட்டுள்ளவாறு சுசீலாவிற்கு உயில் மூலம் பாத்தியப்படுத்தியிருந்தால் வாசாஆ. 1 ஆவணத்தில் அதனை குறிப்பிட்டிருப்பார்கள் என்றால் சரியல்ல.

**12.**வாசாஆ. 1 ஆவணத்தில் சுசீலாவின் பெயரில் உள்ள பட்டாவோ, தீர்வை ரசீதோ இணைப்பு ஆவணமாக இணைக்கப்படவில்லையென்றால் சரிதான். எனவே சுசீலாவின் அனுபவ பாத்தியமும் வாசாஆ. 1 ஆவணப்படி எனக்கு கிடைக்காது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தை நான் தனிநபராக உரிமை

கொண்டாட எனக்கு எந்த உரிமை மூலமும் கிடையாது என்றால் சரியல்ல. சுசீலாவின் மாமியார் பொன்னாட்சி வழக்கு பட்டிகை சொத்தை பொறுத்து OS.No. 195/2010 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**13.** மேற்படி வழக்கில் நானும் என் தகப்பனாரும் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டு வழக்கறிஞரை நியமித்து வழக்காடி வருகிறோம் என்றால் சரிதான். கிருஷ்ணன் இறந்தபின்பு அவருக்கு சுசீலாவும் அவரது அம்மா பொன்னாட்சியும் வாரிசுகள் என்றால் சரிதான். எனவே பொன்னாட்சிக்கும் , வாரிசு அடிப்படையில் வழக்கு பட்டிகை சொத்தை பொறுத்து உரிமையுண்டு என்றால் அது பற்றி தெரியாது. எனக்கு என்னுடைய அப்பாவின் சொத்தில் வாரிசின் அடிப்படையில் உரிமை உண்டு என்றால் சரிதான். அதே போல் மகன் இறந்த பின்பு அம்மாவிற்கு வாரிசு அடிப்படையில் சொத்தில் உரிமை வரும் என்றால் சரிதான்.

**14.** சுசீலா OS.No. 34/2008 என்ற இந்த வழக்கில் விளம்புகை பரிகாரமும் கோரியுள்ளார் என்றால் தெரியாது. நான் முதன் முதலில் வழக்கு பற்றி தெரிந்து கொண்ட போது வழக்கின் தன்மையை கேட்டறிந்தேனா என்றால் எனக்கு தெரியாது, என் அப்பாவிற்கு தான் தெரியும். சுசீலா தனது நிரூபண வாக்குமூலத்தில் வழக்கு பட்டிகை சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரிதாக்கல் செய்யுள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான், ( சாட்சி வாதசாஆ. 1ன் முதல் விசாரணையை படித்து பார்த்து பதிலளித்தார்). மேற்படி சுசீலா தாக்கல் செய்துள்ள வழக்கில் எந்த வித தீர்ப்பும் வழங்கப்படவில்லையென்றால் தெரியாது.

**15.** அவ்வாறு சுசீலாவிற்கு சொத்தின் உரிமை விளம்புகை செய்யாத பட்சத்தில் வழக்கு நிலுவையில் உள்ள இடைப்பட்ட காலத்தில் சொத்தை பொறுத்து உரிமை மாற்றம் செய்வது செல்லாது என்றால் தெரியாது. பொன்னாட்சி தாக்கல் செய்துள்ள வழக்கு நிலுவையில் உள்ளதாலும் சுசீலாவிற்கு வழக்கு பட்டிகை சொத்தை பொறுத்து உரிமை விளம்புகை செய்யப்படாததாலும் , வழக்கு நிலுவையில் உள்ள போது சுசீலா எனது அப்பாவிற்கு செய்து கொடுத்த கிரய ஆவணமும் அதன் தொடர்ச்சியாக எனது அப்பா எனக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணமும் சட்டப்படி செல்லாத ஆவணம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**16.** இந்த வழக்கிலும் பொன்னாட்சி தாக்கல் செய்த வழக்கிலும் இரு தரப்பிலும் சொத்தை பொறுத்து வழக்கு நிலுவையில் உள்ள போது உரிமை மாற்றம் செய்யக்கூடாது என்று இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டு அதுவும் அனுமதிக்கப்பட்டது என்றால்

தெரியாது. பொன்னாட்சி பெயரில் உ ள்ள வழக்கு பட்டிகை சொத்திற்கான உரிமையை பறிக்கும் நோக்கத்தோடு நீதிமன்ற உத்தரவையும் மீறி என் அப்பாவிற்கு சுசீலா வழக்கு பட்டிகை சொத்தை உரிமை மாற்றம் செய்துள்ளார் என்றால் தெரியாது. மேற்படி நீதிமன்ற தடை உத்தரவானது நாளது தேதி வரை அமலில் உள்ளது என்றால் இந்த வழக்கு நிலுவையில் உள்ள விவரம் தெரியாமல் எனது அப்பா கிரயம் பெற்று விட்டார்.

**17.** எனது அப்பா வழக்கு விவரங்களை தெரிந்து கொண்ட பின்னர் என் பெயருக்கு மோசடியாக செட்டில் மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையில் நான் குறிப்பிட்டுள்ள உயிலை நிரூபணம் செய்யும் பொருட்டு எந்த ஆவணமும் சாட்சியமும் விசாரிக்கப்படவில்லையென்றால் தெரியாது. நீதிமன்ற உத்தரவை மீறி வழக்கு நிலுவையில்உ ள்ள போது சுசீலா எனது அப்பா பெயருக்கு எழுதி கொடுத்த கிரய ஆவணமும் என் அப்பா என் பெயருக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணமும் ரத்து செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

**18.** வழக்கு பட்டிகை சொத்தில் குறிப்பிட்டுள்ள வீட்டில் நான் குடியருக்கிறேனா என்றால் குடியிருக்கவில்லை. மேற்படி வீட்டில் நான் வாங்கிய நாளிலிருந்து 3ம் நபர் வாடகைக்கு இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அதன் மூலம் எனக்கு எவ்வளவு ரூபாய் வாடகை கிடைக்கிறது என்றால் ரூ. 1,000 கிடைக்கிறது. நான் ரூ. 10,000 ற்கு வாடகைக்கு விட்டுள்ளேன் என்றாலும் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும், பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள OS.No.195/2010 வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்